**அக்டோபர் - 15**

**"தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்." - மாற் 11 : 22.**

நாம் கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களானதிலிருந்து கிறிஸ்துவின் பள்ளியில் மாணவர்களாக நாம் அவரால் கற்பிக்கப்பட்டு ஆவியின் குணசீலங்களில், விசேஷமாக அதிக விசுவாசத்தில், அதிகதிகமாக அபிவிருத்தியடைய வேண்டிய நோக்கத்தோடு, நாம் அடைகிற அன்றாட அனுபவங்கள் காணப்படாத சக்தியினால் தெளிவாக ஒழுங்குபடுத்தப்பட்டுக் காவல் செய்யப்பட்டிருக்கின்றன. விசுவாசத்தின் இந்த விஷயம் எவ்வளவு முக்கியமானதாக இருக்கிறது என்று ஒருவேளை இப்பொழுது நம்மால் முற்றிலுமாக உயர்வாக மதிக்க முடியாது. அவரைப் பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும் என்று இப்பொழுது அழைக்கப்பட்டிருக்கிறவர்களிடத்தில் கர்த்தர் விசேஷமாக நாடுகின்ற அந்த காரியம் அதுவாகத்தான் இருக்குமென்று தோன்றுகிறது. ஆகையால் நமது விசுவாசத்திற்குத் தக்கதாக உபத்திரவத்திலேயும் நாம் சந்தோஷப்படக்கூடியவர்களாக இருப்போம். கஷ்டங்கள் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்க முடியாது. இவைகள் நமக்காக மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிற இலேசான உபத்திரவங்களாக மாத்திரம் இருக்கின்றன என்று விசுவாசம் அவைகளோடு இணைக்கிற எண்ணம் நமக்கு சந்தோஷத்தைக் கொடுக்க முடியும்.

**- Z ’04, 59 (R 3324)**

ஒரு ஆளையே அல்லது பொருளையோ மனதில் உயர்வாக மதித்தாலும், அந்த ஆள் அல்லது பொருளின்மேல் இருதயப்பற்றை வைப்பதுமே விசுவாசம். தேவனையும் கிறிஸ்துவையும் மனதினால் உயர்வாக மதித்தாலும் அவர்களின்மேல் இருதயப்பற்றை வைப்பதே கிறிஸ்தவ விசுவாசம். அவைகள் தாங்களே தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் சார்பாக வேதாகமம் வெளியிட்டிருக்கிற நிச்சயமான வழிகளில் அப்பியாசிக்கின்றன. அதாவது, அவர்களின் ஆள்தன்மை, குணங்கள், வார்த்தைகள், செயல்கள் இவைகளில், இவ்விதிகளில் அவைகள் முற்றிலுமாக நம்பக்கூடியவைகளாய் இருக்கின்றன என்றும் ஆகையால் நம்பிக்கைக்குப் பாத்திரமாயிருக்கின்றன என்றும், அவைகளே மெய்ப்பித்துக் காட்டுகின்றன. இது உண்மையாய் இருக்கிறதென்று கணக்கில்லாத சமயங்களில் நம்முடைய அனுபவங்கள் மெய்ப்பித்துக் காட்டுகின்றன. இந்தக் காரணத்துக்காகத் தன்னில் ஒரு நீதிப்பிழை இல்லாமலோ அல்லது நமக்குப் பிரதிகூலமில்லாமலோ பிதாவையும், தன்னையும் நம்பும்படி யேசு நம்மிடம் கேட்டுக் கொள்ளலாம். **- P ’36, 110, 111.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**யோசு 1:9; 2நாளா 15:7; 20:20; 32:7,8; நெகே 4:14; யோபு 35:14; சங் 4:5; 27:14;31:19,24; 37:3,5,7,39,40; 55:22; 115:9,11; நீதி 3:5,6; மத் 17:20.**

**கோபுர வாசிப்பு : Z ’14, 282 (R 5539).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் விசுவாசத்தை அப்பியாசித்தேனா? எப்படி பலன்கள் எவை?**